**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 447** **நாள்: 07.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-77க்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனப் பொறியாளர்கள் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆலோசகர்களுடன் இன்று (07.09.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மழைநீர் வடிகாலானது டெமல்லஸ் சாலை முதல் பவுடர் மில்ஸ் சாலை கால்வாய் வரை 1906 மீ. நீளத்தில் ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. ஆய்வின்போது, ஆணையாளர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை பொதுமக்களுக்கு இடையூறின்றி போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மேற்கொண்டு பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மண்டல அலுவலர் திரு.எம்.சதீஷ் குமார், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனப் பொறியாளர்கள், ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆலோசகர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**